# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 27.09.2019**

விசாரணை நடைபெற்ற இடம் : மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
விருதுநகர் மாவட்டம். விருதுநகர்

**முன்னிலை**

**திரு.இரா.தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP- 428/A/2017**

திரு P. மாரீஸ்வரன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டாட்சியர் அலுவலகம்
வெம்பக்கோட்டை
விருதுநகர் மாவட்டம் -- பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கில் இவ்வாணையத்தால் இன்று (27.09.2019) விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட முகாம் விசாரணைக்கு மனுதாரர் திரு. P. மாரீஸ்வரன் தன்னால் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லையென்று தெரிவித்து தனது நண்பர் திரு S. ஜெயபாரதியை அனுமதிக்குமாறு தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார். அதன் பேரில் மனுதாரரின் நண்பர் திரு S. ஜெயபாரதி விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி. க. பஞ்சவர்ணம், பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், வெம்பக்கோட்டை ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் 18.09.2016 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், வெம்பக்கோட்டை அவர்களுக்கு அனுப்பிய மனுவில் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம் உட்பட்ட கிராம உதவியாளர் பணியிடங்கள் தொடர்பாக 11 இனங்களில் தகவல்கள் கோரி மனுவினை தாக்கல் செய்துள்ளார். பின்னர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல் ஏதும் கிடைக்கப்பெறவில்லையென்று தெரிவித்து 23.12.2016 நாளிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் வளாகம், விருதுநகர் அவர்களுக்கு மனு செய்து தான் கோரிய தகவல்கள் தனக்கு வழங்கப்படாததால் தனக்கு தகவல்கள் வழங்கவோ அல்லது வழங்க முடியாததற்கான காரணத்தை வழங்கவோ அறிவுறுத்துமாறு தெரிவித்துள்ளார். அதன் பின்னர் 15.03.2017 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக உதவி ஆணையர், வருவாய் நிர்வாகம் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு மனுவினை அனுப்பி தான் கோரிய தகவல்கள் தனக்கு வழங்கப்படவில்லையென்று தெரிவித்து தனக்கு தகவல்கள் வழங்கவோ அல்லது வழங்க முடியாததற்கான காரணத்தை வழங்கவோ அறிவுறுத்துமாறு தெரிவித்துள்ளார். பின்னர் பொதுத் தகவல் அலுவலர்/உதவி ஆணையர், வருவாய் நிர்வாகம் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சேப்பாக்கம், சென்னை அவர்களால் 24.03.2017 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது அதில் மனுதாரர் கோரிய தகவல்கள் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தைச் சார்ந்தது என்பதால் மனுதாரரின் மனு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் அவர்களிடம் தகவல்களை பெற்றுக்

கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டு அதன் நகல் பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிறகு தகவல்கள் ஏதும் வரப்பெறவில்லையென்று தெரிவித்து ஆணையத்திற்கு பிரிவு 18ன் புகார் அளித்து இதன் மீது விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளார். அதன் பேரில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர் நேரில் ஆஜராக ஆணையத்திலிருந்து அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு அதன் பேரில் பொதுத் தகவல் அலுவலர் நேரில் ஆஜரானார் மனுதாரர் ஆஜராகாமல் தனது நண்பரை அனுமதிக்குமாறு தெரிவித்து கடிதம் அனுப்பி அதன் பேரில் அவரது நண்பர் ஆஜரானார்.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு தங்கள் அலுவலக கடித எண். ந.க.அ5/2847/2016, நாள் 09.10.2016 தேதியிட்ட கடிதத்தின் வழியாக தகவல்கள் வழங்கப்பட்டதாக தெரிவித்தார். மனுதாரர் சார்பாக வந்திருந்தவர் இதுவரை எந்தவித தகவல்களும் வரப்பெறவில்லையென்று தெரிவித்தார். இதற்கு பொதுத் தகவல் அலுவலர் தன் அலுவலகத்தில் பரிமரிக்கப்படும் RTI பதிவேட்டை ஆணையத்தின் முன் சமர்பித்து 09.10.2016 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு சாதாரான தபாலில் தகவல்கள் அனுப்பப்பட்டது என்று தெரிவித்தார். மேலும் ஆணையத்திலிருந்து அழைப்பாணை வரப்பெற்றவுடன் 20.09.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாகவும் தகவல்கள் வழங்கப்பட்டதாக தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்பித்தார். இக்கடிதம் விசாரணைக்கு ஆஜரான மனுதாரரின் நண்பருக்கு விசாரணையின்போது சார்வு செய்யப்பட்டது. மனுதாரரின் 18.09.2016 நாளிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவிற்கு பொதுத் தகவல் அலுவலரால் 09.10.2016 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதால் இதில் எந்தவித நடவடிக்கையும் தேவையில்லையென்று கருதி இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/- (இரா. தட்சிணாமூர்த்தி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP- 428/A/2017</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டாட்சியர் அலுவலகம்
வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்

<u>மனுதாரர்</u>

திரு P. மாரீஸ்வரன்
த/பெ. K. பெருமாள்
3/106, தெற்குத் தெரு, இறவார்பட்டி,
சல்வார்பட்டி அஞ்சல், சிவகாசி வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.

*JJ/PA 03.10.2019*